Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　PEOPLES DAILY　　மக்கள் தினசரி

நாதம்: 02　　திருவள்ளுவர் ஆண்டு 2022　　புரட்டாதி 20　　(06 - 10 - 1991)　　ஞாயிற்றுக்கிழமை　　ஓசை: 230

## நெருக்கடியின் மத்தியில் கண்டாவளை பாடசாலைகள்

கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவு கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கிய 6 கொத்தணிகளைக் கொண்ட 41 பாடசாலைகளில் 21835 மாணவர் கல்வி கற்கின்றனர். 655 வகுப்பறைகள் உண்டு. ஆசிரியர் பற்றாக்குறை 313 ஆகும். ஒரு பாடசாலைக்கு குறைந்தது 8 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. இவ் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக ஒரு நாளைக்கு 320 மாணவர்கள், தமது கல்வியை நாளாந்தம் இழந்து கொண்டிருக்கின்றனர். 12254 மாணவர்கட்கு இருக்கை வசதி இல்லாதும் 206 வகுப்பறைகள் பற்றாக்குறையாகவும் உள்ள காரணத் (4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா அரசியல் நெருக்கடியின்

# பின்னணியில் இந்திய அரசு

## தீருவில் எழுச்சிக் கூட்டத்தில் மகேந்திரராசா

"அரசியல், இராணுவ ரீதியாக அன்று எம்மிடம் தோல்வி கண்ட இந்திய அரசு இன்று சிறிலங்கா அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி அதற்குப் பின்னணியில் நின்று இங்கு நுழைய முற்படுகின்றது. இந்த நிலையில் நாம் எந்த வகையிலும் எமது போராட்டத்துக்கு எதிராக, தடையாக இருக்கும் எந்த ஒரு அந்நிய சக்தியாயினும், அது எந்த வடிவில் செயற்பட்டாலும் அவற்றை நாம் நிச்சயம் முறியடித்தே தீருவோம்".

இவ்வாறு நேற்று நடைபெற்ற பன்னிரு வேங்கைகளின் நினைவாக தீருவில் மாவீரர் சதுக்கத்தில் நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. வே. மகேந்திரராசா



தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில் இன்று உலகில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது. வல்லரசுப் போட்டிகள் குறைவடைந்து வேற்று வடிவம் எடுத்துள்ளது. இந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்ட எழுச்சி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியால் தியாக மரணமடைந்த பன்னிரு வீர வேங்கைகளின் நான்காம் ஆண்டு நிறைவாக நேற்று மாபெரும் எழுச்சி ஊர்வலமும் எழுச்சிக் கூட்டமும் நடைபெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சி கொண்டு திரண்டு வந்து மாபெரும் எழுச்சி ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

நேற்று மாலை 3 30 மணியளவில் சகல பகுதிகளிலும்

## ஆ. க. வெ. நடவடிக்கை

## 21 மீனவர்களும்

## அரும்பொருள் கண் காட்சி கால நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிதர் கலைஞானியின் மாபெரும் அரும் பொருள் கண்காட்சி அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்க பூர்வமான ஆலோசனை எதிர்பார்ப்பு

(நமது நிருபர்)

தமிழீழத்தின் கைத்தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான முயற்சியில் தமிழீழ ஆய்வு நிறுவன யாழ் மாவட்ட பிரிவு செயற்பட்டு வருகின்றது. கைத்தொழில் துறை சார்ந்த வல்லுநர்களிடமிருந்து ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் ஆக்கங்களையும் தமிழீழ ஆய்வு நிறுவனம் எதிர்பார்ப்பதாகவும் அறிவித்துள்ளது.

இத்தத் துறை சம்பந்தமான வெளியீடுகள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை வைத்திருக்கும் அன்பர்கள் தமிழீழ ஆய்வு நிறுவனம் யாழ். மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## இந்தோனேசியா

## 132 விமானப் படையினர் விமான விபத்தில் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாத் தலைநகரம் ஜகார்த்தாவில் நேற்றுப் படை விமானம் விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் 132 விமானப் படை வீரர்கள் உயிரிழந்தனர். இவ் விமானம் கட்டடம் ஒன்றில் மோதி விபத்திற்குள்ளானதாக அறிவிக்கப்படுகின்றது.

## கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதை எதிர்த்து

## லலித், காமினி குழுவினர் உயர் நீதிமன்றம் சென்றனர்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான 'இம்பீச்மென்ட்' மனுவில் கையெழுத்திட்டமையை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஐ. தே. க அதிருப்தியாளர்கள் எட்டுப்பேர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேனகுரேக்கும் மற்றும் கட்சி நிர்வாகக் குழுவிற்கும் எதிராக தம்மை கட்சியிலிருந்து வெளியேற்றியமை குறித்தே இவர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா, ஜி. எம். பிரேமச்சந்திரா, சமரவீர வன்னி, சந்திராசங்கந்த ஆகியோருடன் மற்றும் மூன்று பாராளு

## ஆ. க. வெ. நடவடிக்கை

## முழு விபரத்துடனும் 'விடுதலைப் புலிகள்'

தமிழீழ விடுதலைப் புலிகள் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' ஆவணி-புரட்டாதி மாத இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் முப்பத்தொரு நாட்கள் ஆனையிறவு இராணுவ முகாம் சூழலில் நிகழ்ந்த ஆ.க.வெ. இராணுவ நடவடிக்கை நடைபெற்ற விதத்தை இது தொடர்பான விரிவானதொரு ஆய்வுப்பார்வையை உள்ளடக்கி முன்பக்கச் செய்தி தீட்டப்பட்டுள்ளது.

போர், சமர், சண்டை என்ற சொற்பதங்களினூடாக இராணுவ விஞ்ஞானத்தை

(4ஆம் பக்கம் பார்க்க)

நேற்று மாலை 3 30 மணியளவில் சகல பகுதிகளிலும் இருந்து மக்கள் வெள்ளம் உடுப்பிட்டிச் சந்தியை வந்தடைந்தது.

உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து எழுச்சிக்கோசங்களை முழங்கிய படியும், பெரிய அளவிலான பதாதைகளைத் தாங்கிய படியும் அணி அணியாக மக்கள் அணிவகுத்துச் சென்ற எழுச்சி ஊர்வலம் திருவில் மாவீரர் சதுக்கத்தைச் சென்றடைந்தது.

ஊர்வலமாக எடுத்துவரப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 21 மீனவர்களும் திங்கள் சென்னை செல்வர்

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்காகப் புறப்பட்டு சிறிலங்கா கடற்படையினரால் கடலில் வைத்து துன்புறுத்தப்பட்டு தப்பி நீந்திக் கரைசேர்ந்த தமிழக மீனவர்கள் இருபத்தொரு பேரும் எதிர்வரும் திங்களன்று விமானமூலம் சென்னையைச் சென்றடைவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## முகமட் கொழும்பு திரும்பினார்

(கொழும்பு)

பொதுநல அமைப்புபாராளுமன்ற அங்கத்தவர்களின் நிறைவேற்றுக் குழுவின் தலைவர் என்ற வகையில் புதுடில்லியில் நடைபெற்ற முப்பத்தேழாவதுமாநாட்டில் கலந்து கொண்ட சிறிலங்காவின் சபாநாயகர் எம். எச். முகமட் நேற்று மாலை கொழும்பு திரும்பினார்.

## திருக்கோணமலை களஞ்சியத்தில் மோசடி

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் பெருமளவிலான உணவுப் பொருள்கள் மோசடி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இங்கு லப்லேனில் உள்ள உணவுத் திணைக்களக் களஞ்சியத்தில் இருந்து ரூபா 46,37,344.75 பெறுமதியான

(4ஆம் பக்கம் பார்க்க)

இருந்து வெளியேற்றப்பட்ட ஐ. தே. க அதிருப்தியாளர்ராக தம்மை கட்சியிலிருந்து வெளியேற்றியமை குறித்தே சந்திரசேகரந்த ஆகியோருடன் மற்றும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் வழக்கை உயர் நீதி மன்றில் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வாறு வழக்குத்தாக்கல் செய்துள்ளதன் மூலம் இவ் வழக்கு விசாரணை முடிவடையும் வரையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை விட்டு வெளியேற்றுவதிலிருந்து அரசியலமைப்பு சட்டம் பாதுகாப்பு அளிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## சித்த சுயாதீனமற்றோர் கிழக்கில் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா முப்படைகளினதும் தொடர்ச்சியான தாக்குதல்களால் பலர் சித்த சுயாதீனமற்றவர்களாகக் காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களில் பெரும்பாலானோர் வீதியோரங்களில் வசிக்கின்றார்கள் இவர்களுள் குழந்தைப் பேற்றை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு சில இளம் பெண்களும் காணப்படுவதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# கொழும்பு 'சார்க்' மாநாட்டில் இந்தியா பங்குபற்றக் கூடாது

## - 'இந்து' ஆலோசனை

(சென்னை)

கொழும்பில் வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் சார்க்உச்சி மாநாட்டில் இந்தியா பங்கு பற்றக் கூடாது. அல்லது பிரதமமந்திரி தரத்திலில்லாத மட்டத்தில் பிரதிநிதிகள் குழு ஒன்றை அனுப்பி வைக்கலாம் இவ்வாறு சென்னை ஆங்கில நாளிதழ் இந்து ஆலோசனை தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரேமதாசா அரசு இந்திய அமைதிப் படைக்கு எதிராகப் போராட புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாகக் குற்றச்சாட்டு இருக்கும் போது இந்தியா உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமா என்று கேள்வியும் எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக இந்தியாவுக்கான சிறிலங்கா உயர்ஸ்தானிகரிடம் உள்ளூர் அரசியல் வாதிகள் கடும் ஆட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமர் கொழும்பு வருவார்

## - டிரோன் பெர்னாண்டோ

கொழும்பில் நடக்கவிருக்கும் சார்க் நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் கலந்து கொள்ளமாட்டார்என வெளிவந்தசெய்திகளில் எதுவித உண்மையுமில்லை என்று புதுடில்லியிலிருந்து நேற்றுத்திரும்பியவெளிவிவகார இணை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அண்மையில் புதுடில்லியில் நிகழ்ந்த காமன்வெல்த் நாடுகளின் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைக் குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற டிரோன் பெர்னான்டோ தானும், சபாநாயகர் எம். எச். முகமட்டும், பிரதமர் நரசிம்மராவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசியதாக கூறினார்.

# கஞ்சிகுடிச்சாறு பகுதியில் உக்கிரமான குண்டுவீச்சு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிகுடிச்சாறு பகுதியில் சிறிலங்கா இராணுவம் தொடர்ந்து மூன்றாவது நாளாக பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தின் கிழக்கேயுள்ள கஞ்சிகுடிச்சாறு மேற்கிலுள்ள பக்மிட்டியாவ மற்றும் தெற்குப் பகுதியிலுள்ள கஞ்சல ஆகிய காட்டுப்பகுதிகளில் விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் தொடர்ச்சியான குண்டுவீச்சு தாக்குதல்களைமேற்கொண்டவண்ணமுள்ளன.

மேற்படி தாக்குதல் நடவடிக்கை பற்றி சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி லங்கா புவத் செய்தி வெளியிடுகையில் விடுதலைப்புலிகளின் முகாம்களை நிர்மூலமாக்கும் நோக்குடன் மேற்படி பகுதிகளில் சிறிலங்கா விமானப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு மோதலில் வீரமரணமடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் கடந்த மாதம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற மோதல்களில் 200 புலிகள் வரை வீரமரணமடைந்தனர். இவர்களில் 28 பேரின் விபரம் வருமாறு:

05-09-91 இல்

★ சுபாதிகா (வேகமதி வேலுச்சாமி, பள்ளவக்குளம், குச்சவெளி)

★ மலையான் (முத்துலிங்கம் செல்வக்குமார், பெரியபோரதீவு, மட்டுநகர்)

★ சூரி (தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம், கோயில்போரதீவு, மட்டுநகர்)

★ சந்திரன் (ஆறுமுகம் சண்முகராசா, புன்னைநீராவி, விசுவமடு)

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆகிலில் தட்டச்சு இயந்திரம் ஐந்து விற்பனைக்கு உண்டு. தொடர்பு R. மகேந்திரலிங்கம் 8/1, அம்மன் வீதி, சந்நிதிமடம், யாழ்ப்பாணம். (R/1809)

### முத்தாமணக்கு விதை.

பல பயன் பயக்கும் முத்தாமணக்கு விதை நடுகைக்கு வேண்டுவோர் ரூபா. 2/- அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (B/3251)

### ENGLISH CLASSES

1992/93ஆம் ஆண்டு G. C. E (A/L) English Literature வகுப்பு மாணவர்கள், GAQ வெளிவாரித்தேர்வுக்கு ஆங்கிலத்தினைத் துணைப்பாடமாக (ESL) எடுக்கும் மாணவர்கள், G. C. E (A/L) மாணவர்கள் ஆகியோருக்கான General English (With Grammer) வகுப்புகள் அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளன தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- வ. கோவிந்தபிள்ளை 62, பழம் றோட், சந்நிதிமடம். (R/1813)

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### விசேட அறிவித்தல்

★ க. பொ. த உயர்தர 93 ஆம் ஆண்டுப்பிரிவு வகுப்புக்களை 15 10.91 இற்கு பின்னர் ஆரம்பிக்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

★ 1 11 91 க்கு பின்னர், சந்தா செலுத்தி அடையாள அட்டை பெறத் தவறும் நிறுவனங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்படும். அந் நிறுவனங்கள் தொடர்ந்து இயங்க முடியாது.

★ பாடசாலை நாட்க


## 6 ஆம் மாத நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 20 - 06 - 1972 | 20 - 03 - 1991 |


### 2ஆம் லெப்டினன்ட் அங்ரனி
(துரைச்சாமி அகிலன்)

20.03.1991 அன்று சிலாவத்துறை இராணுவமுகாம் மீதான தாக்குதலின்போது வீரமரணமடைந்த 2ஆம் லெப்டினன்ட் அங்ரனிக்கும் இவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சித்தப்பா, சித்தி, மாமாமார்,
மாமிமார்.

(B/3261)

## 90-ம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



| வீர ஜனனம் | வீர மரண |
|---|---|
| 26 — 05 — 1968 | 11 — 07 — 1991 |

ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரமரணமடைந்த

### லெப்டினன்ட் அமுதினி
(சிவமதி சிவசுப்பிரமணியம்)

மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்
அந்தியேட்டி 08-10-91

“ நாம் புகழுக்காகப் போர் புரியவில்லை;
கௌரவத்திற்காகப் போர் புரியவில்லை;
சுதந்திரத்திற்காகப் போர் புரிகின்றோம்.
முழந்தாளிட்டுக்கொண்டு உயிரோடிருப்பதிலும்
நின்று கொண்டு இறப்பதே மேல்” - மாஜினி

## 148ஆம் நாள் வீரஅஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 24 - 04 - 1972 | 12 - 05 - 1991 |

### கப்டன் வெங்கடேஸ்
(பாலசுப்பிரமணியம் மோகனதாஸ்)

சால்ஸ் அன்ரனி படைப்பிரிவைச் சேர்ந்தவர்
திதி:- 06-10-1991

12-05-1991 அன்று ஓமந்தையில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தவர்

இனவெறிக் கூலியனின்
கொட்டம் அடக்கிட
ஓமந்தையில்
அடங்காப் போர் முனையில்
ஒப்பற்ற வேங்கையாய்
எதிரிகளைப் பந்தாடினாய்.
உன்வீரம் எதிரிகள் பேசுமுன்பே
உன் பேச்சும் அடங்கியதா?
எங்கே நீ?
நேரிய இலட்சியத்துக்காய்
நெடிய வானுலகு சென்றுவிட்டாயா?
உன் பொன்னுடலைக் கூட - நாம்
பார்க்க முடியாத
பாவிகள் ஆகி விட்டோமே?
உயிருள்ளவரை உன்
பெயர் நிலைத்திருக்கும்
நீ மறைந்து விட்டாலும் - உன்
நினைவு எம் நெஞ்சை விட்டு
என்றென்றும் அகலாது
உன் நினைவால் விழிநீர் சொரியும்.

நாளை 6-10 91 ஞாயிற்றுக்கிழமை காலை 6மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## 63-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை ஜெசிந்
(குலசிங்கம் கபிலன்)

| வீரஜனனம் | | வீரமரணம் |
|---|---|---|
| 17.10.1973 | - | 05.08.1991 |

யாழ். இந்துக்கல்லூரி உயர்தர
கணிதப்பிரிவு மாணவன் - 92

களம் பல கண்டு மண் காத்து தமிழீழம் — பெற நினைத்தாய்
சமர் புரிந்து ஆனையிறவில் — களப்பலியானாய்
காவியமாகிவிட்ட உன் பிரிவால் நாம் இங்கு
கொழு கொம்பை இழந்துவிட்ட கொடிபோல் - தவிக்கின்றோம்
கொற்றவனே உன் ஆசை நிறைவுற்று இத் - தமிழீழக் காற்றில்
கொலுவிருந்து எங்களுடன் குலாவுவாய் என - அமைதி காண்போம்

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

குறிப்பு:-

அன்னாரின் நினைவாக சிறுவர் நிறை இல்லம் திருநெல்வேலியில் சிறார்களுக்கு மதிய போசனம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகிறோம்.

(B/ 3259)

## நினைவு கூருகின்றோம்.

1991 - 10 - 06



தொடர்ந்து இயங்க முடியாது.

★ பாடசாலை நாட்களில் மாலை வகுப்புகளை 4.00 மணிக்கு முன்னர் ஆரம்பிக்க வேண்டாம்.

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்

(R/1812)

சுதந்திரத்திற்காகப் போர் புரிகின்றோம். முழந்தாளிட்டுக்கொண்டு உயிரோடிருப்பதிலும் நிமிர்ந்து நின்று கொண்டு இறப்பதே மேல்'' - மாஜினி

வீரமரணமடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள். 8-10-1991 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்படி உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உரும்பராய் கிழக்கு
உரும்பராய் (R/1799)

பெற்றோர்
சகோதர சகோதரிகள்

யேட்டிக் கிரியையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''அம்பிகாவாசம்''
வேம்படி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

தந்தை, தாய், அண்ணன்மார்,
அக்கா, தம்பி,
அண்ணி, பேத்தி.

(R/1804)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

புதிய மாணவரைப் பதிவு செய்தல்


கல்வியாண்டு 1990/91

1990/91 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் 1991 ஒக்ரோபர் மாதம் 25-ம் திகதிக்கு முன்னர் தங்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவோரின் இடத்துக்கு வேறு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

பதிவாளர்

(B/3263)

# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி மகிழினி பத்மநாதன்



திருமதி கமலாம்பிகை செல்லத்துரை



திருமதி கீதா பத்மநாதன்

6 10 90இல் கடலில் ஏற்பட்ட விபத்தில் அகால மரணமடைந்த உங்களை இன்றைய தினத்தில் துயருடன் நினைவு கூருகின்றோம்.

5ஆம் வட்டாரம்,
அனலைதீவு.

(B/3237)

உங்கள் பிரிவால் துயருறும்,
உற்றார், உறவினர்.

கப்டன் ரகுவப்பா



1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் எமைப் பிரிந்த

சாண்டோ (இராமு கனகசுந்தரம் - கல்வியா)

விடத்தல்தீவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

லெப். சாம் (துரைரட்ணம் ஜெயறூபன் - ஏழாலை)

1987 ஆம் ஆண்டு இந்திய - சிறிலங்கா கூட்டுச் சதியினை வெளிப்படுத்து முகமாக சயனைட் உட்கொண்ட நிலையில் இராணுவ வைத்தியசாலையில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட

கப்டன் ரகுவப்பா (ராஜமாணிக்கம் ரகுநாதன் - பொலிகண்டி)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, காங்கேயன் ஓடை பள்ளிவாசலில் வைத்து இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் உபதபாலதிபர்

மயிலங்காட்டில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் பொன்னம்பலம்

1989 ஆம் ஆண்டு பரந்தனில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய

ரவி (தர்மலிங்கம் ரவீந்திரன் - உருத்திரபுரம்)

ரகு (நவரத்தினம் நடனசிகாமணி - உருத்திரபுரம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/8260)

சந்தைகளில் பெட்டிக் கடைகளில் வியாபாரம் செய்பவர்கள் சிறிய மூலதனத்தை உடையவர்கள். உடனுக்கு உடன் வாங்கி விற்பவர்கள். இவர்களுக்கு சிலவேளைகளில் திடீர் விலை வீழ்ச்சியில் ஒரு சில போத்தல் மண்ணெண்ணெயில் நட்டம் ஏற்படலாம். ஆனால் அவர்களும் கூடியளவு கையில் இருந்த ஒரு சில போத்தல் மண்ணெண்ணெயைச் சந்தை விலை ஏற்றத்திற்கு ஏற்ற விலையில் விற்றவர்களே.

ஆனால், மொத்த வியாபாரிகள் ஒருபோதும் நட்டத்திற்கு வியாபாரத்தை செய்யப்போவதில்லை. பொருள்கள் வரும் சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளதை அறிந்தும் அவர்கள் தமது கொள்ளை இலாபத்தில் குறைவேற்பட்டாலும், மேலும் இலாபம் குறைவடைவதைத் தடுக்கும் நோக்கமாகவே தமது கையிருப்புக்களையும் பதுக்கல் பொருள்களையும் சந்தைக்கு விட்டுள்ளார்கள். இதன் காரணமாகவே தற்பொழுது விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் ஏற்படுத்திய பொருளாதாரத் தடையைத் தொடர்ந்து பொருள்களின் விலையை உயர்நிலையில் பேணுவதில் பெரும் வியாபாரிகள் தீவிர கவனம் செலுத்தி வந்துள்ளனர்.

பொருள்கள் சிலவற்றை கொண்டுவரக் கூடிய வாய்ப்புகள் இருந்தும் அவர்கள் சந்தையில் உயர்விலை பேணக்கூடிய நிலையிலேயே பொருள்களைக் கொண்டு வந்துள்ளனர். பொருள்களின் அளவையும் நிர்ணயித்திருந்துள்ளார்கள். விலையைப் பேணுவதற்காக பொருள்களை சந்தைக்கு விடாமல் பதுக்கியுள்ளனர். அத்தோடு யாழ் மாவட்டத்திற்கான ஜி. விநியோகஸ்தர்கள் பொருள்களை பெருமளவில் கொண்டு வருவதற்கு அக்கறை காட்டவும் இல்லை. இதற்கான பழியை புலிகள் மீதும் போட்டுள்ளார்கள்.

இந்நிலையில் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடுகளுக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் தீவிர பொருளாதாரக் கட்டுப்பாடு மட்டுமல்ல, பெரும் முதலாளிகளின் திட்டமிட்ட நடவடிக்கைகளும் காரணம் என்பதே உண்மை. முதலாளிகள் நூற்றுக் கணக்கில் தமது இலாபத்தைக் கணக்கிடாமல் இலட்சக் கணக்கில் தமது இலாபத்தைக் கணக்கிட முற்பட்டமையே இதற்குரிய காரணமாகும்.

ஆனால், ஒரு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இனத்தைச் சேர்ந்த வியாபாரிகள் இவ்வாறாக இலாபநோக்கில் மட்டும் செயற்படுதல் ஒரு வருந்தக் கூடிய விடயமாகும். இது அவர்களின் சமூக நோக்கமற்ற செயற்பாட்டைக் காட்டும் ஒரு நடவடிக்கையுமாகும்.

அடிப்படையாகக் கொண்ட தொழில் நுட்பமுறை 21பேர் இந்தத் தொழிலகத்தில் நேரடியாக வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். இவ் தொழிலாளர்களை மாத்திரம் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிலகமாக இந்த நிறுவனம் செயற்படுகிறபோதிலும் கிராமங்களில் பல்வேறு தொழில்களில் இருப்பவர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

வடமராட்சி கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சமுத்திரா உற்பத்தியை சந்தைப்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது.

மாதகல், சுழிபுரம், தீவுப் பகுதி ஆகிய பகுதிகளிலிருந்தே கடல் உணவு தயாரிப்பதற்கான மீன்வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படுகின்றன. சமீபத்திய சூழ்நிலைகளினால் கொள்வனவு நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

### முதலீடும் நோக்கமும்

சமுத்திரா தொழிலகத்தைப் பற்றிய ஆரம்பகட்ட வேலைகளைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டால் அது கடந்த ஒன்பது மாத காலத்தில் ஒரு பரீட்சார்த்த செயற்திட்டமாகவே செயற்பட்டது. இடையில் பின்னடைவுகள் ஏற்படாத போதிலும் சமுத்திரா தொழிலகத்தை விஸ்தரிக்கும் பணியில் பணப்பற்றாக்குறை என்பது முக்கியமாகி ஒரு தேக்க நிலையைச் சந்திக்கவேண்டியதாயிற்று. சமுத்திராவை விஸ்தரித்து முழுமையாக இயங்கும் நிலையில் அமைப்பதற்குத் தொழிலகக்

றிற்கான இடங்கள் செயல்முறையில் தொழிற்பிரிவினையைக் கடைப்பிடிக்கக் கூடிய வடிவமைப்பில் அமைந்திருப்பது புலப்படுகின்றது. கட்டடங்கள் பெரும்பாலனவாக இல்லாமல் வெப்பமான காலங்களில் பதனிடும் பொருள்களைக் குளிர்வித்தற்கும், மழைகாலங்களில் உலர்த்துவதற்கும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மழைகாலங்களில் பதனிடும் முறையில் ஏற்படக் கூடிய ஈரலிப்புத்தன்மையை அகற்றுவதற்கு ஈரஆவியை வெளிப்படுத்தும் பொறி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. தொடர் செயல்முறைப் பொறியியல் தொழில் நுட்ப முறைகள் கையாளப்படவில்லை என்றாலும் மின்சாரம் இல்லாத காலத்தில், சூழல் நலனையும் பொருளாதார ஆதாயத்தையும் கருத்திற் கண்டு உள்ளூர் எரிபொருளான விறகை மாத்திரம் பாவித்து ஈரமான ஆவியை வெளிப்படுத்தும் பொறிமுறை புகுத்தும் புது விஷயமாக இருக்கிறது. இத்தொழில் நுட்பம் தேவையின் விளைவுதான். இது போன்ற நடைமுறை அனுபவத்தை எடுத்துக் கொண்டால், முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் உடனடியாக வெற்றிகண்டாலும் நீண்டகால நோக்கில் தோல்வியையே கண்டுவிடும் என்பது புலனாகின்றது.

சமுத்திரா தொழிலகத்தின் அடிப்படை நோக்கங்களை ரத்தினச் சுருக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

கடல் வளத்தைப் பயன்படுத்தல், பதனிடும் முறையில்

றில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. கருவாடு வியாபார ரீதியில் செய்யப்படுவதால் அதை நீண்ட காலத்துக்குப் பக்குவப்படுத்தி வைக்க முடியாது. அது நாறுகிறது. அத்துடன் கடல் உணவைப் பதனிட்டுச் சாப்பிடும் உணவுப் பழக்கமும் நம் மக்களிடமில்லை'' என்கிறார் பொது மேலாளர் வீ. மனோகரன்.

மேலும் தவறான முறையில் பருவம் தப்பி மீன் பிடிக்கப்படுவதாகச் சமூகப்பிரக்ஞையுடன் கூறும் அவர், தொழிலில் பிடிபடும் மீன்களை அவ

வகைகள் போஷாக்கின் உறைவிடம். அடைக்கப்பட்டு பல இடங்களில் எந்த விதவிளம்பரமும் இன்றி விற்பனையாகின்றன. இளங் குழந்தைகள் முதல் முதியோர் வரை உணவாகக் கொள்ளலாம். இந்த உணவில் சுவையூட்டிகளினால் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடவும் புஷ்டியாக வளரவும் உதவுகிறது.

எமது உணவுப் பழக்கத்தை நாம் மாற்றிக் கொள்வதன் மூலம் எமது உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்வதோடு உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதாகவும் அமையும்.

# 16 லோக்சபாத் தொகுதிக்கு நவம்பரில் இடைத்தேர்தல்

(டில்லி)

இந்தியாவின் பதினாறு பாராளுமன்றத் தொகுதிகளுக்கும், ஐம்பத்தெட்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் அடுத்த மாதம் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

நவம்பர் பதினைந்தாம் திகதி நடைபெறவுள்ள இந்த இடைத் தேர்தலில் பிரதமர் பி.வி. நரசிம்மராவ், பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார், திருமதி சோனியா காந்தி ஆகியோரும் போட்டியிடலாம் எனத் தெரியவருகின்றது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் பெற இன்னும் பன்னிரண்டு இடங்கள் காங்கிரஸ் கட்சிக்கு தேவைப்படும் நிலையில் நடக்கவிருக்கும் இடைத்தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு சனசமூக நிலையமும் சைவ அபிவிருத்திச் சமூகமும் இணைந்து நடாத்தும் சிவபரன் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை (திங்கள்) பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெறவுள்ளது.

அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர், நல்லூர் வட்டத் தலைவர், அரியாலை மத்தி வடக்கு சிற்றூரவைத் தலைவர் ஆகியோர் இவ் விழாவில் கலந்து கொள்வர்.

# யூக்கோசெலவாக்கியா - குரோசியா தலைவர்கள் இடையில் இணக்கம்

(ஹெயிக்)

குரோசியா தனது எல்லையினுள் சுதந்திர பூமியாக விளங்கவேண்டும், குரோசியாவில் வசிக்கும் செர்பிய சிறுபான்மையினரின் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்று நேற்று முன்தினம் ஹெயிக் நகரில் குரோசிய யூகோசெலாவியத் தலைவர்களிடையே இணக்கம் காணப்பட்டுள்ளது.

உடனடியாக இருதரப்பினரும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க முன்வந்தால் அரசியல் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் சாத்தியம் அதிகரித்திருப்பதாக ஐரோப்பிய சமூக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் லொக்பட் நகரிலிருந்து இருபது மைல் தொலைவுக்குள் பயங்கரமான எறிகணைகள், மற்றும் விமானத் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாக தெரிகின்றது.

இதனிடையே எதிர்வரும் செவ்வாயன்று ஹெயிக் நகரில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுகளுக்கு குரோசியா, செர்பியா அரசுகளுடன் குரோசியாவிலுள்ள செர்பிய சிறுபான்மையினரின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# 7 ஆம் திகதிமுதல் 10வரை திலீபன் தடகள போட்டி

(கிளி, நிருபர்)

தியாகி திலீபன் ஞாபகார்த்த தடகள விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 07-10-91 தொடக்கம் 10-10-91 வரை கிளி, மத்திய மகா. வி. மைதானத்தில் நடைபெறவுள்ளது.

07-10-91 மரதன் ஓட்டம் கரப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம், கயிறு இழுத்தல் என்பனவும் 08-10 91 தடகள விளையாட்டுக்கள் 9-10-91 மாட்டு வண்டிச் சவாரி, 10-10-91 துவிச்சக்கரவண்டி ஓட்டம், தடகள விளையாட்டு என்பன நடைபெறும். சென்ற 25 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இப்போட்டிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (63)


யா/நடேஸ்வரக்கல்லூரி
காங்கேசன்துறை
கல்லூரி அபிவிருத்திச்சபை

வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்: யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்

காலம்: 12-10 - 1991 சனிக்கிழமை
காலை: 10-00 மணிக்கு

குறிப்பு: சகல பெற்றோர்களும் தமது அங்கத்துவப் பணமாகிய ரூபா 5/- இனை அதிபரின் அலுவலகத்தில் முன் கூட்டியே கட்டி அங்கத்துவத்தைப் புதுப்பித்தல் வேண்டும்.

சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்

க. இராசதுரை
அதிபர்

(B/3257)


### பல்லாயிரக்கணக்கில்

பட்ட பன்னிரு வேங்கைகளினதும் உருவப்படங்கள் மாவீரர் நினைவுத்தூபிக்கு அண்மையாக வைக்கப்பட்டு மாலை சூட்டி மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பன்னிரு வேங்கைகளும் வீர மரணமடைந்த நேரமாகிய 5.05 மணிக்கு மாவீரர் சதுக்கத்தில் கூடியிருந்த அனைவரும் எழுந்துநின்று இரு நிமிடங்கள் மௌன அஞ்சலிசெலுத்தியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு கோ.மகேந்திரராசா தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து இராணுவ அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா, செயலதிபர் திரு. யோகி ஆகியோரும் ஏனைய பிரமுகர்களும் மாவீரர்களது உறவினர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து வடமராட்சி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. அரசண்ணாவின் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகியது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. கோ. மகேந்திரராசா, செயலதிபர் திரு, யோகி, யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு மாறன், மகளிர் முன்னணிப்பொறுப்பாளர் செல்வி ஜெயா, கடற்படைத் தளபதி சூசை, யாழ். மாவட்ட

### கலந்துரையாடல்

இன்று காலை 10-00 மணிக்கு வலிகாமம் பிரிவுக்குட்பட்ட அனைத்துத்துறைசார்ந்த அதாவது (எழுத்தாளர்கள், ஓவியர்கள், நடிகர்கள், பாடகர்கள், நடனம், சங்கீதம், நாதஸ்வரம், தவில்) என்பன அடங்கிய சகல கலைஞர்களுக்குமான ஒர்முக்கிய கலந்துரையாடல் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடாத்தவுள்ளதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

### மணலாறு

12-09-91 இல்

★ சேனாதி (அழகு ரவீந்திரன், முரசுமோட்டை)

14-09-91 இல்

★ செனிக் (இராசையா கமலநாதன், சேற்றிலைமடு, வவுனியா

★ ரவி (சின்னையா குமார், கணேசபுரம், கிளிநொச்சி)

16-09-91 இல்

★ காந்தி (சதாசிவம் ரவிச்சந்திரன், மன்னார் வீதி, வவுனியா)

★ வாணன் (ஆறுமுகம் கணேசமூர்த்தி, மரவடிச்சேனை, மூதூர்)

★ காஸ்ரோ (இராமசாமி குமார், இரத்தினபுரம், கிளிநொச்சி)

★ குட்டி (தங்கராசா தாசன், உப்புவெளி, திருமலை)

★ பகீதரன் (கிருஷ்ண பிள்ளை அருணகிரிநாதன், வட்டக்கச்சி)

★ கிருஸ்ணா (சிவகுமார் சுதன், பண்டிசுட்டான், கண்டாவளை)

★ சுபன் (கோவிந்தசாமி கணேசசேகரன், தர்மபுரம், கிளிநொச்சி)

★ எட்வின் (சின்னையா பிரபாகரன், செம்மலை, அளம்பில்)

★ துலாஞ்சலி (சித்திரா தேவி சோமசுந்தரம், புளியங்குளம்) ஆகியோரும்,

17-09-91இல்

★ மிராஸ் (வைரமுத்து விஜேந்திரன், கிளிவெட்டி மூதூர்),

19-09-91 இல்

★ நேரு (பொன்னையா குமரதாஸ், கிண்ணியா திருமலை),

★ திமிலன் (சதாசிவம் ஜீவரட்ணம், பாண்டிருப்பு 2

# சுதந்திரவாசல் வரைசென்ற வேங்கைகள் விபரம்

விடுதலைப் புலிகள் ஆவணி-புரட்டாதி இதழோடு நாற்பத்திநான்கு பக்கங்கள் கொண்ட சிறப்பு இணைப்பில் இதயத்தில் - இனத்தின் விடுதலையையும், கரத்தில் தேசத்தின் வரலாற்றையும் சுமந்து கொண்டு சுதந்திரவாசல்வரை சென்று மாவீரர்களாகிய வேங்கைகளின் விபரப் பதிவு தரப்பட்டுள்ளது.

தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த 573 விடுதலைப் புலி வீரர்கள் தங்கள் செங்குருதி சிந்திச் சரித்திரமாகிவிட்டார்கள் என்பதை எடுத்துச்சொல்லும் இப்பதிவேடு மண்ணுக்குப் பொட்டிட்ட மாதிரி புதைகுழிகள் எண்ணுக்கணக்கின்றி எழுந்தாலும் இம்மண் விடுதலை பெறும். இனி வரும் சந்ததி சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் என்பதற்குச் சான்று பகரும்.

### சிறிலங்கா

நிலைமையில் நாம் நிலைமைக்கேற்ப சில அனுகூலமான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. இன்று சிறிலங்காவில் உள்ள அரசியல்வாதிகள் தமது பதவிப்போட்டிக்காக வழமை போல இனவாத நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இந்த இனவாதிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். இங்கு தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்புகள் தொடருமாயின் அல்லது இனவாதம் தொடர்ந்தும் வளர்க்கப்படுமாயின் நிச்சயமாக அவர்களுடைய நாட்டை ஒரு சுய இறைமை உள்ள நாடாக எப்பொழுதுமே வைத்திருக்க முடியாது என்பதையும் அன்னிய ஆக்கிரமிப்புச் சக்திகளின் களமாகவும் அவர்களே உருவாக்கிக் கொள்ளுவார்கள் என்பதை அவர்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இந்த நிலையில் எமது போராட்டத்தின்போது நாம் எடுக்கும் முடிவுகள் எமது தேசநலனுக்கு பங்கம் விளைவிக்கும் என்றும் அல்லது போராட்டத்திற்கு எதிரானது என்றும் கற்பனைகளை வளர்க்காது எமது விடுதலைப் போராட்டத்திற்கு தொடர்ந்தும் மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று கேட்டு தனது சிறப்புரையை நிறைவு செய்தார்.

# குண்டுவெடிப்பு

பாகிஸ்தானின் தென்பகுதி நகரங்களில் ஒன்றான கராச்சியில் முக்கிய அரசுக் கட்டடங்கள் நிறைந்த பகுதியொன்றில் நேற்றுக்காலை அடுத்தடுத்து குண்டுகள் வெடித்துள்ளன. இதில் குறைந்த பட்சம் ஐவர் கொல்லப்பட்டனர் முப்பது பேர் காயமடைந்துள்ளனர்.

### அரும்பொருள்

மன்றத்தின் ஆதரவில் பத்து நாட்களாக காண்பிக்கப்பட்ட மேற்படி கண்காட்சியை ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவ மாணவியர்களும் பொதுமக்களும்பார்வையிட்டு வருவது தெரிந்ததே.

யாழ் பல்கலைக் கழக நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்று வரும் மேற்படி கண்காட்சி எதிர்வரும் ஒன்பதாம் திகதி புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இந்து மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

### நெருக்கடியின்

தினங்கள் வகுப்புக்கள் மர நிழல்களின்கீழ் நடைபெறுகிறது கரும்பலகை உட்பட ஏனைய உபகரணங்கள் போதிய அளவு இல்லை அத்துடன் இப்பாடசாலையில் கல்வி நிலையும் மிக பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் ஆண்டு 6 தொடக்கம் 10 வரை கல்வி கற்கின்ற மாணவர்களில் அநேகர் ஆரம்ப அறிவு அற்ற நிலையிலே காணப்படுகிறார்கள் (63

### திருக்கோணமலை

உலர் உணவு வகைகள் கைப்பாடப்பட்டுள்ளன இது தொடர்பாக களஞ்சியப் பொறுப்பாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான களஞ்சியப் பொறுப்பாளர் எச் சுமதிபாலா வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்

அதிபர்

(B/3257)

## 40-ம் நாள் நினைவஞ்சலி



வீரமரணம்
28-08-1991

### லெப்டினன்ட் சிறிநாத்

(மயில்வாகனம் திருச்செல்வம்)
(பன்குள நேரடி மோதல்)

விடுதலை வேட்கைக்கு
விடுதலைப் புலியாக
அண்ணனின் பாதையிலே
வீறுகொண்டெழுந்தாய்
பன்குளம் நேரடி
மோதலில் உன்னுயிரைத்
தமிழ் மண்ணிற்காக
அர்ப்பணித்தாய் - உனது
இலட்சியப் பாதையிலே
நாமும் வழிதொடர்வோம்.

செல்வநாயகபுரம் (உப்புவெளி),
திருமலை. திருமலை மக்கள்

(B- 3253)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

னிப்பொறுப்பாளர் செல்வி ஜெயா, கடற்படைத் தளபதி சூசை, யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச் செல்வன், மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் பல இடம்பெற்றன. (க)

---

முழு விபரத்துடனும் விளக்கும் கட்டுரையுடன் ஆனையிறவுத்தளம் மீதான முற்றுகைச் சண்டை பற்றிய விபரணமும் இடம் பெற்றுள்ளது மேலும்வவுனியாதினேஷ் இளந்திரையன் ஆகியோரால் எழுதப்பட்ட குருதிச் சுவடுகளும், தளபதி பொட்டுவின் விசேட செவ்வியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆ. க. வெ. இராணுவ நடவடிக்கையில் பெண் போராளிகள் மற்றும் இருமுனைகளில் இரு சண்டைகள் என்பவ போன்ற அம்சங்களையும் கவிதைகளையும் இணைத்துக் கொண்டு இருபது பக்கங்களுடனும் சிறப்பு இணைப்பு ஒன்றுடனும் 'விடுதலைப் புலிகள்' ஆவணி - புரட்டாதி இதழ் வெளிவந்துள்ளது. இவ் இதழின் விலை ரூபா இருபத்தைந்து ஆகும். இருபத்தியேழு நாட்கள் நீடித்த மணலாற்று சமர் பற்றிய குறிப்போடு 'விடுதலைப் புலிகள்' இதனைப் படித்து முடிக்கும்போது 'அண்ணையவை ஓடி வாங்கோ துவக்குகள் இருக்கு எதிரி வருகிறான்' என்று இளந்திரையனோடு சேர்ந்து குரல் கொடுக்கவேண்டும் என்னும் உணர்வு நெஞ்சில் பதிகிறது.

---

கொழும்பு
சேபனை தெரிவிக்கும் கடிதங்களை கையளித்துள்ளார்கள் என்றும் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

மலை),
★ திமிலன் (சதாசிவம் ஜீவரட்ணம், பாண்டிருப்பு 2 கல்முனை),
★ வில்லியம் (சாமுவேலப்பு விஜயராசா, பாடசாலைவீதி, திருமலை),
★ எமில்டன் (பூச்சி கிருஷ்ண மூர்த்தி, 153ஆம் கட்டை, முறிகண்டி),
★ டென்சியா (லிங்கநாயகி பத்திநாதன், வெற்றிலைக் கேணி),
21-09-91 இல்
★ சர்மா (முத்துலிங்கம் குணசீலன், கட்சன் வீதி, வட்டக்கச்சி),
22-09-91 இல்
★ சரத் (செபஸ்தியாம் பிள்ளை அற்புதராசா, மணற் குடியிருப்பு, முல்லைத்தீவு),
★ சுபிர் ஆனந்தராசா வினோத்திரராசா, 154 ஆம் கட்டை, கிளிநொச்சி),
23-09-91 இல்
★ குபேரன் (இராமச்சந்திரன் தர்மராசா, விநாயகபுரம் துணுக்காய்),
★ றெஜினோல்ட் (இராமலிங்கம் பத்மராசா, குமரபுரம், பரந்தன்',
25-09-91 இல் காயப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த
★ தேவன் (சிவலிங்கம் தமிழ்வாணன், மூதூர், திருமலை), என்பவர் 14-10-91 இல் வீரமரணமடைந்துள்ளார். இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

---

கஞ்சிகுடிச்சாறு
படை விமானங்கள் பாரிய அளவில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன என்றும் இத்தாக்குதலில் விசேட அதிரடிப்படையினர் இராணுவத்தினருக்கு உதவியாக இணைந்து செயற்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தது. (ச)

ழங்கவேண்டும்என்று கேட்டு தனது சிறப்புரையை நிறைவு செய்தார்.

பாலா வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 2ஆம் ஆண்டு நினைவு

பரந்தன் அரசியல் பொறுப்பாளர்

### ரகு

(நவரத்தினம் நடனசிகாமணி)

வீரஜனனம் 12-10-1969 | வீரமரணம் 06-10-1989

அன்றைய தினம் வீர மரணத்தைத் தழுவிய வீரவேங்கைகள் ரவி, குமார், ஆகியோருக்கும் எமது அஞ்சலிகள்.

12 , உருத்திரபுரம், கிளிநொச்சி. குடும்பத்தினர்

(R/1811)


## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

**(BECON)**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**A/L 91 DAY CLASSES**

மீட்டல் வினாவிடை வகுப்புகள்

பொருளியல்:- திரு. வரதராஜன்
இந்துநாகரிகம்:- திருமதி அருள்நங்கை
கணக்கியல்:- திரு. சௌந்தி
வர்த்தகம்:- திரு. லோகசிங்கம்

ஆரம்பம்:- 07-10.91 திங்கள் 8.00 a. m

(B/3225)